மன்றப்பொருள்

2020 ம் ஆண்டு அக்டோபர் 30–10–2020 ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற **சாதாரணக்கூட்டம்** பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு.எஸ். பிரபாகரன்**
**தனி அலுவலர்.**

1. ஆணையர் (கூ.பொ) அவர்களின் அக்டோபர் 2020ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்**

2. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல்துறை அரசாரணை (நிலை) எண்.181, நாள்.19.09.2008–ன்படி 2020–2021–லிருந்து ஆண்டிற்கான குத்தகை இனங்கள் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி 2021–2024 ஆண்டு குத்தகை உரிம இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆணையர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலரால் நகராட்சி அலுவலகத்தில் நடத்தப்படும்.

ஒவ்வொரு இனத்திற்கும் உரிய பொறுப்புத் தொகையை வங்கி வரைவோலை மூலம் நகராட்சி அலுவலகத்தில் செலுத்தி அதற்கான அத்தாட்சியை பெறுதல் வேண்டும். இவ்வாறு தகுந்த அத்தாட்சி பெற்ற நபர்கள் மட்டுமே அன்று நடைபெறும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். இதர நபர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

குத்தகை இனம் ஒவ்வொன்றிலும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் பங்கு பெற விரும்புவோர் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு தனித்தனியாக செலுத்த வேண்டிய பொறுப்பு தொகைக்கான வங்கி வரைவோலையை ஒப்பந்தப்புள்ளிக்கான ஆவணங்களின் அதன் நகலினை ஏல விண்ணப்பத்துடன் இதர ஆவணங்களும், அனைத்து குத்தகை இனங்களிலும் ஏலம் கோர விரும்புகிறவர் மற்றும் குத்தகை நிலுலுவ இல்லை என்பதற்கு (No Due Certificate) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு குத்தகை இனங்களுக்கும் உள்ள நிபந்தனைகள் 1920–ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சி, மாவட்ட நகராட்சி சட்டம் பிரிவுகளின்படி நகரமன்ற ஒப்புதலுடன் இந்நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டதாகும்.

பொது ஏலம் முடிந்த பின்னர் ஒவ்வொரு இனத்திற்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனியாக வகைப்படுத்தி, வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள்/பொது ஏலதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு இனத்திற்கும் பொது ஏலம் அல்லாத ஒப்பந்தப்புள்ளியில் எதில் அதிகபட்சமாக கேள்வி கேட்கப்படுகிறதோ, அதையே உயர்ந்தபட்ட கேள்வியாக கருதப்படும். இதனடிப்படையில் மன்றத்தின் பரிசீலனைக்கு கொண்டு செல்லப்படும்.

ஏலம் கேட்க விரும்புகிறவர்கள் அவர்களுடைய பாஸ்போர்ட் சைஸ் கலர் போட்டோவுடன் தாங்களாகவோ நேரிலாவது (அ) எழுத்துமூலமாக சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் மூலமாக அதிகாரம் பெற்ற முகவர் (Power of Attorney) மட்டுமே ஏலம் ஒப்பந்தப்புள்ளிகள் கேட்க தகுதி பெற்றவராவார்.

**ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் நகராட்சியின் குத்தகை இனங்கள்**

| வ. எண். | குத்தகைஉரிமம் இனங்களின் விபரம் | ஏல வைப்புத் தொகை ரூ. | தாக்கல் செய்ய வேண்டிய சொத்து மதிப்புக்கான செல்வ சான்றிதழ் 01.01.2020–க்கு பிறகு பெற்றதாக இருக்க வேண்டும். ரூ. | சொத்து மதிப்பு செல்வ சான்றிதழ் தர இயலாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | காந்தி பூங்கா கடை எண் .9 | 55,000/– | 2,50,000/– | 1,10,000/– |
| 2. | காந்தி பூங்கா மேல்மாடி கடை எண்.1 | 55,000/– | 2,50,000/– | 1,10,000/– |
| 3. | காந்திபூங்கா மேல்மாடி கடை எண்.2 | 55,000/– | 2,50,000/– | 1,10,000/– |
| 4. | காந்தி பூங்கா கடை எண். 10 | 55,000/– | 2,50,000/– | 1,10,000/– |
| 5. | பேருந்து நிலையம் நுழைவு வாயில் கிழக்குபுறம் மேற்கு பார்த்த தரைக்கடை எண்.3 | 30,000/– | 1,50,000/– | 60,000/– |
| 6. | பேருந்து நிலைய கடைஎண். 48 | 55,000/– | 2,50,000/– | 1,10,000/– |
| 7. | காமராஜ் நகர், எம்.எல்.ஏ. அலுவலகம் அருகில் கடை எண்.8 | 55,000/– | 2,50,000/– | 1,10,000/– |
| 8. | உளுந்தூர்பேட்டை புறவழிச்சாலை தரைக்கடை எண்.1 | 30,000/– | 1,50,000/– | 60,000/– |
| 9. | பேருந்து நிலைய தரைக்கடை எண்.59 | 30,000/– | 1,50,000/– | 60,000/– |
| 10 | பேருந்து நிலைய தரைக்கடை எண்.60 | 30,000/– | 1,50,000/– | 60,000/– |
| 11 | இந்திரா காந்தி சாலை தெற்குபார்த்த பேருந்து நிலைய கடை எண்.4 | 55,000/– | 2,50,000/– | 1,10,000/– |
| 12 | இந்நகர எல்லையினுள் பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 7,00,000/– | 15,00,000/– | 14,00,000/– |
| 13 | இரத்தினம் பிள்ளை தினசரி மார்க்கெட் வந்து செல்லும் காய்கனி இறக்கும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 6,25,000/– | 13,00,000/– | 12,50,000/– |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் கடையை பொது ஏலம் விட ஒப்பந்தப்புள்ளி அல்லது பொது ஏலத்தில் உள்ள நிபந்தனையின் அடிப்படையில் அதிக தொகை கோரும் நபருக்கு கடையை ஒப்படைக்கவும், பேருந்து நிலையம் மற்றும் இரத்தினம் பிள்ளை மார்க்கெட் வந்து செல்லும் காய்கனி இறக்கும் வாகனங்களுக்கு கட்டணம் செய்யும் உரிமம் ஆகியவற்றிற்கும் பொது ஏலம் வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. பொது ஏல அறிவிப்பு செய்திதாளில் வெளியிடவும் அதற்குண்டான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 3503 /2020 /அ1**

3.பண்ருட்டி நகராட்சியினை தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகராட்சி என மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை மூலம் சான்று பெற நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண்.01 முதல் 33 முடிய 33 வார்டுகளில் கழிவறை இல்லாத வீடுகளை கணக்கீடு செய்து தூய்மை இந்தியா திட்ட இயக்கத்தின் கீழ் தனிநபர் கழிவறை கட்டும் திட்டத்தின் மூலமாக கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டு குடியிருப்புகளில் வசிக்கும் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. மேலும், கழிவறை கட்ட வசதி இல்லாத குடியிருப்புகளை கண்டறிந்து அதனையும் கணக்கெடுப்பு செய்து அப்பகுதிகளில் சமுதாய கழிவறைகள் எண்ணிக்கைகள் புனரமைப்பு செய்தும் புதியதாகவும் கட்டியும் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் நகராட்சி மூலம் சீர் செய்து பயன்பாட்டில் உள்ளது. பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஒரு பொது கழிவறையும் அமையப்பெற்றுள்ளது. எனவே, பொதுமக்கள் எவரும் திறந்த வெளியினை கழிப்பிடமாக பயன்படுத்துவதினை தவிர்த்திடும் பொருட்டு நகராட்சியில் உள்ள வார்டுகளிலும் தனிநபர் கழிவறைகளை பயன்படுத்தி வருவதினால் மற்ற வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சகம் சார்பில் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகராட்சி (ODF+) என சான்று பெறப்பட்டது. இதனையடுத்து தற்சமயம் நகராட்சி பகுதியில் வார்டு 1 முதல் 33 முடிய வசிக்கும் பொதுமக்கள் எவரும் திறந்தவெளியில் மலம் கழித்தல் மற்றும் சிறுநீர் கழித்தல் அற்ற நகராட்சியாக (ODF+) அறிவிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

3. திறந்தவெளி கழிப்பிடமற்ற நகராட்சி (ODF+) என அறிவிப்பு செய்திட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்து பொதுமக்களிடமிருந்தும், வியாபாரிகளிடமிருந்தும் கருத்துக்கள் தெரிவித்திட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யலாம்.
4. தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கான கட்டணத்தினை தூய்மை இந்தியா திட்ட நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

**கோ.எண். 550/2018/எச்1**

4.இந்நகராட்சியில் 2020–2023–ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் 28.10.2020–ம் தேதி விடப்பட்டுள்ளது. கீழ்கண்ட இனங்கள் கொரோனா தொற்று காலத்தில் பொது ஏலம் விடப்பட்டதில் உயர்ந்த ஏலக்கேள்வி தொகையை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் நகராட்சியின் குத்தகை இனங்கள்**

<table>
<tr><th>வ. எண்.</th><th>குத்தகைஉரிமம் இனங்களின் விபரம்</th><th>ஏலதாரரின் பெயர் மற்றும் முகவரி</th><th>ஏலக்கேள்வி தொகை ரூ.</th></tr>
<tr><td>(1)</td><td>(2)</td><td>(3)</td><td>(4)</td></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">காந்தி பூங்கா<br>கடை எண் .9</td><td>திரு. டி.மோகன்பாபு த/பெ. துரைராஜ்,<br>67/40, சத்தியமூர்த்தி வீதி,பண்ருட்டி.</td><td>3750/–</td></tr>
<tr><td>என்.ஆர்.முருகன்,<br>72, மெயின் ரோடு, புதுப்பேட்டை,பண்ருட்டி.</td><td>3700/–</td></tr>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">காந்தி பூங்கா மேல்மாடி<br>கடை எண்.1</td><td>என்.ஆர்.முருகன்,<br>72, மெயின் ரோடு, புதுப்பேட்டை,பண்ருட்டி .</td><td>2700/–</td></tr>
<tr><td>எம்.முருகன்,<br>84ஏ, காவேரி நகர், எஸ்.என்.சாவடி,<br>கோண்டூர், கடலூர்.</td><td>2650/–</td></tr>
<tr><td rowspan="2">3</td><td rowspan="2">காந்திபூங்கா மேல்மாடி<br>கடை எண்.2</td><td>வி.சுரேஷ்பாபு<br>வள்ளலார் நகர், மஞ்சக்குப்பம், கடலூர்.</td><td>2600/–</td></tr>
<tr><td>என்.ஆர்.முருகன்,<br>72, மெயின் ரோடு, புதுப்பேட்டை,பண்ருட்டி .</td><td>2700/–</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 4 | காந்தி பூங்கா<br>கடை எண். 10 | என்.ஆர்.முருகன்,<br>72, மெயின் ரோடு, புதுப்பேட்டை,பண்ருட்டி . | 5000/– |
| | | ஆர்.ராம்குமார்,<br>பிள்ளையார் கோவில் தெரு, பெரிய<br>எலந்தம்பட்டு, பண்ருட்டி தாலுக்கா. | 5200/– |
| 5 | பேருந்து நிலையம் நுழைவு வாயில் கிழக்குபுறம் மேற்கு பார்த்த தரைக்கடை எண்.3 | ஏ.காசிம்கான், த/பெ. அஜிஸ்கான்,<br>10, சாமியார் தர்கா,பண்ருட்டி. | 800/– |
| | | ஆர்.சத்தியா, க/பெ. ராமதாஸ்,<br>6/30, ரயில்வே காலனி,<br>திருவதிகை, பண்ருட்டி. | 900/– |
| 6 | பேருந்து நிலைய<br>கடைஎண். 48 | ஐ.இப்ராகிம்கான், த/பெ.முகமதுஇஸ்மாயில்கான்,<br>14ஏ, முகம்மது நபி தெரு, பண்ருட்டி. | 2650/– |
| | | கு.அப்துல்ஹக்,<br>10, தர்கா வண்டிமேடு,<br>அவுலியா நகர், பண்ருட்டி. | 2600/– |
| 7 | காமராஜ் நகர், எம்.எல்.ஏ. அலுவலகம் அருகில்<br>கடை எண்.8 | ஆர்.ரமேஷ், த/பெ. ராமசாமி,<br>4வது தெரு, பஞ்சவர்ணம் நகர்,பண்ருட்டி. | ஏலத்தில் கலந்து கொள்ளவில் லை |
| | | ப.வேம்பு, த/பெ. புஷ்பநாதன்,<br>314, மேற்கு தெரு, அங்குசெட்டிப்பாளையம்,<br>பண்ருட்டி. | ஏலத்தில் கலந்து கொள்ளவில் லை |
| 8 | உளுந்தூர்பேட்டை புறவழிச்சாலை தரைக்கடை எண்.1 | பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை | |
| 9 | பேருந்து நிலைய தரைக்கடை எண்.59 | கே.அருள் த/பெ.குப்புசாமி,<br>41,42, அவ்வைப்புதுத் தெரு, பண்ருட்டி. | 1050/– |
| | | ரா.ராமஜெயம், த/பெ.ராமகிருஷ்ணன்,<br>32/42, அவ்வைப்புதுத் தெரு, பண்ருட்டி. | 1000/– |
| 10 | பேருந்து நிலைய தரைக்கடை எண்.60 | பூமிபாலகன், த/பெ.வேலாயுதம்,<br>256, செம்மேடு, பண்ருட்டி. | 1000/– |
| | | கே.அருள் த/பெ.குப்புசாமி,<br>41,42, அவ்வைப்புதுத் தெரு, பண்ருட்டி. | 1050/– |
| 11 | இந்திரா காந்தி சாலை தெற்குபார்த்த பேருந்து நிலைய கடை எண்.4 | ஐ.இப்ராகிம்கான், த/பெ.முகமதுஇஸ்மாயில்கான்,<br>14ஏ, முகம்மது நபி தெரு, பண்ருட்டி. | 1550/– |
| | | எஸ்.சோமு, த/பெ.சுப்பிரமணியன்,<br>48, சத்தியமூர்த்தி தெரு,பண்ருட்டி. | 1500/– |
| 12 | இந்நகர எல்லையினுள் பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை | |
| 13 | இரத்தினம் பிள்ளை தினசரி மார்க்கெட் வந்து செல்லும் காய்கனி இறக்கும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | வி.சுரேஷ்பாபு<br>வள்ளலார் நகர், மஞ்சக்குப்பம், கடலூர். | 505000/– |
| | | ஆர்.ராம்குமார்,<br>பிள்ளையார் கோவில் தெரு, பெரிய<br>எலந்தம்பட்டு, பண்ருட்டி தாலுக்கா. | 523000/– |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரிசை எண். 7–ல் உள்ள குத்தகை இனத்திற்கு கலந்து கொண்ட ஒரு நபரில் வைப்புத் தொகை செலுத்தாத காரணத்தினாலும், மறு ஏலம் வைக்க மன்றம் அனுமதிக்கலாம். மேலும், வரிசை எண்.8 மற்றும் வரிசை எண்.12–ல் உள்ள இனத்திற்கு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளாத காரணத்தினால் மூன்று இனங்களையும் மறு ஏலம் வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் கடையை பொது ஏலம் விடப்பட்டதில் அதிக கேள்வி கேட்ட ஏலதாரருக்கு அவரவருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள அதிகபட்ச ஏலத்தொகை உள்ளவருக்கு குத்தகை இனங்களை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
4. கொரோனா காலத்தில் பொது ஏலத்தில் அதிக நபர்கள் கலந்து கொள்ளாத காரணத்தினால், ஏலத்தில் கலந்து கொண்டவர்களில் அதிக ஏலத்தொகை கேட்ட குத்தகைதாரர்களுக்கு ஏல நிபந்தனைகளின் அடிப்படையில் குத்தகை இனங்களை ஒப்படைப்பு செய்யவும், பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 3503 /2020 /அ1**

இடம் –பண்ணுருட்டி நகராட்சி

நாள்– 30–10–2020

ஆணையாளர் / தனி அலுவலர்

பண்ணுருட்டி நகராட்சி.